<u>02.09.2010–ம் நாளிட்ட தமிழ்நாடு</u>
<u>அரசிதழின் சிறப்பு வெளியீட்டில்</u>
<u>வெளியிடப்பட வேண்டும்</u>

AD (PR)

<u>சுருக்கம்</u>

சட்டம் (ம) ஒழுங்கு – விநாயகர் சதுர்த்தி விழா, 2010 – சிலை கரைப்பு ஊர்வலங்கள் – சென்னை மாநகர் மற்றும் சென்னை புறநகரில் சிலைகளைக் கரைப்பதற்கான இடங்கள் – அறிவிப்பு செய்யப்படுகின்றன.

---

பொது (சட்டம் (ம) ஒழுங்கு–பி)த் துறை

அரசாணை (நிலை) எண்.783 நாள் : 02.09.2010.

3 SEP 2010
தலைமைச் செயலகம், சென்னை

<u>படிக்கவும்</u> :

1. அரசாணை (நிலை) எண்.1397, பொது (சட்டம் (ம) ஒழுங்கு–பி)த் துறை, நாள் 21.09.2004.
2. அரசாணை (நிலை) எண்.874, பொது (சட்டம் (ம) ஒழுங்கு–பி)த் துறை, நாள் 24.08.2005.
3. அரசாணை (நிலை) எண்.809, பொது (சட்டம் (ம) ஒழுங்கு–பி)த் துறை, நாள் 13.08.2006.
4. அரசாணை (நிலை) எண்.1453, பொது (சட்டம் (ம) ஒழுங்கு–பி)த் துறை, நாள் 29.08.2007.
5. அரசாணை (நிலை) எண்.994, பொது (சட்டம் (ம) ஒழுங்கு–பி)த் துறை, நாள் 22.08.2008.
6. அரசாணை (நிலை) எண்.773, பொது (சட்டம் (ம) ஒழுங்கு–பி)த் துறை, நாள் 19.08.2009.
7. சென்னை மாநகரக் காவல் ஆணையாளரின் கடித எண்.747/SB.XIX/2010, நாள் 18.08.2010.
8. சென்னை புறநகர் காவல் ஆணையாளரின் கடித எண்.532/CIW-IS/2010, நாள் 12.08.2010.

– – – –

<u>ஆணை</u> :

சென்னை மாநகரக் காவல் ஆணையாளர், பார்வை 7–ல் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், சென்னை மாநகரைப் பொறுத்த வரையில் இவ்வாண்டு விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்களின்போது கீழ்க்கண்ட இடங்களில் விநாயகர் சிலைகளைக் கரைக்க அனுமதித்து அறிவிப்பு வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார் :-

(1) பட்டினப்பாக்கத்தில் சீனிவாசபுரம்
(2) காசிமேடு மீன்பிடித் துறைமுகம் அருகில்
(3) திருவொற்றியூர் பாப்புலர் எடைமேடையின் பின்புறம்
(4) நீலாங்கரையில் பல்கலை நகர்

2. சென்னை புறநகர் காவல் ஆணையாளர், பார்வை 8–ல் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், சென்னை புறநகரைப் பொறுத்த வரையில் இவ்வாண்டு விநாயகர் சதுர்த்தி

ஊர்வலங்களின்போது கீழ்க்கண்ட இடத்தில் விநாயகர் சிலைகளைக் கரைக்க அனுமதித்து அறிவிப்பு வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார் :-

(1) எண்ணூரில் இராமகிருஷ்ணா நகர் கடற்கரையில்

3. சென்னை மாநகரக் காவல் ஆணையாளர் மற்றும் சென்னை புறநகர் காவல் ஆணையாளர் ஆகியோரது பரிந்துரையினை நன்கு பரிசீலனை செய்தபின், 2010-ம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழாவின்போது, சென்னை மாநகரம் மற்றும் சென்னை புறநகரில் கீழ்க்கண்ட இடங்களில் விநாயகர் சிலைகளைக் கரைக்க அனுமதியளித்து இதன்மூலம் அறிவிப்பு வெளியிடப்படுகிறது :-

<u>சென்னை மாநகரம்</u>

(1) பட்டினப்பாக்கத்தில் சீனிவாசபுரம்.
(2) காசிமேடு மீன்பிடித் துறைமுகம் அருகில்
(3) திருவொற்றியூர் பாப்புலர் எடைமேடையின் பின்புறம்
(4) நீலாங்கரையில் பல்கலை நகர்

<u>சென்னை புறநகர்</u>

(5) எண்ணூரில் இராமகிருஷ்ணா நகர் கடற்கரையில்

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.மாலதி,
அரசு தலைமைச் செயலாளர்.

பெறுநர்

காவல் துறை இயக்குனர், சென்னை-4.
காவல் ஆணையாளர், சென்னை காவல், சென்னை-8.
காவல் ஆணையாளர், சென்னை புறநகர் காவல், சென்னை-16.
இயக்குனர், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, சென்னை-2. (2 நகல்கள்)
(02.09.2010-ம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடுவதற்காக)
தலைவர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், சென்னை-32.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை-9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர், சென்னை-9.
இயக்குனர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.
(செய்தித் தாள்களில் வெளியிடுவதற்காக).

<u>நகல்</u> :
பொது(மி.க.)த் துறை, சென்னை-9.
உள்துறை, சென்னை-9.

/ஆணைப்படி // அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்